ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1659/15 - 2010 ජුනි 22 වැනි අඟහරුවාදා - 2010.06.22
*1659/15 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

மரணமடைந்ததன் காரணமாக அக்கரைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

மொஹமட் அபூபக்கர் அச்சிமொஹமட் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான தேசிய காங்கிரஸ் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், அக்கரைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. மீரா சாஹிப் றிப்கான் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும்.

இப்போது அக்கரைப்பற்று பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் எம். எம். எஸ். கே. பண்டார மாபா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. மீரா சாஹிப் றிப்கான் என்பவர், அக்கரைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எம். எம். எஸ். கே. பண்டார மாபா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
அக்கரைப்பற்று பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாறை,
2010, யூன் 7.

7 - 244

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் இமதுவ பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*தென் மாகாணத்தின் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக இமதுவ பிரதேச சபையின் தவிசாளரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;*

*இமதுவ பிரதேச சபையின் தவிசாளர் ஜயவிக்ரம கங்கானம்கே தர்மரத்ன ஜயவிக்ரம எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்பட வேண்டியவருமான அக் கட்சியைச் சேர்ந்தவரும், இமதுவ பிரதேச சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65அ (1) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. அஹங்கம விதானகே சரத் குமார என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும்.*

*இப்போது இமதுவ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அந்தோனி பிமல் இந்திரஜித் த சில்வா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. அஹங்கம விதானகே சரத் குமார என்பவர், இமதுவ பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*ஏ. பி. ஐ. த சில்வா,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*இமதுவ பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*காலி,*
*2010, யூன் 9.*

*7 - 245*

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் இமதுவ பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*தென் மாகாணத்தின் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக இமதுவ பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;*

*ஜயவிக்ரம கங்கானம்கே தர்மரத்ன ஜயவிக்ரம எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், இமதுவ பிரதேச சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின்கீழ் தகுதியுடையவருமான ஆள் ஒருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ(2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ரத்னசிறி கிதுலம்பிடிய கோரலேகே என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும்.*

*இப்போது இமதுவ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அந்தோனி பிமல் இந்திரஜித் த சில்வா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. ரத்னசிறி கிதுலம்பிடிய கோரலேகே என்பவர், இமதுவ பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*ஏ. பி. ஐ. த சில்வா,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*இமதுவ பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*காலி,*
*2010, யூன் 9.*

*7 - 246*

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

**குருநாகல் பிரதேச சபை**

*குருநாகல் பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. துமிது கார்தியே புஞ்சிஹேவா என்பவர், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென குருநாகல் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக்க முதியன்சேலாகே ஆனந்த லொகுபண்டார ரத்நாயக்க ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
குருநாகல் பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
குருநாகல்,
2010, யூன் 15.

7 - 247

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.